[1979 மார்ச் 1

போன்று மற்ற எலிகளைச் சாப்பிடுவதாகத் தெரியவில்லை. அப்படிச் சாப்பிடுகிறார்கள் என்றால் அவர்களுடைய தொகுதியில் அப்படி இருக்கிறார்களோ என்னவோ, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : இந்தியாவில் 480 கோடி எலிகள் இருப்பதாகவும், 15 இலட்சம் டன் உணவை அவைகள் சாப்பிடுவதாகவும் சொல்லப்படுகிறது. எலிகளுக்கு வைக்கிற மருந்துகளை அவை தின்றுவிட்டு கொழுத்துவிடுவதால் பூனைகளால் எலிகளை பிடிக்க முடிவதில்லை. ஆகவே நாட்டுப் பூனைகளுக்குப் பதிலாக காட்டுப் பூனைகளை எலிகளைப் பிடிப்பதற்குப் பயன்படுத்துவதற்கான ஏற்பாட்டினை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபோன்ற யோசனை அரசிடம் இல்லை.

திரு. சேலம் மு ஆறுமுகம்: அமைச்சர் அவர்கள்கூறிய நச்சுப் பொருள்கள் அத்தனையையும் தின்றுவிட்டு எலிகள் கொழு கொழு என்று வளர்கிறதே தவிர அவை இறப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அதிகத்திறன் படைத்த நச்சுப்பொருள்களைக் கண்டுபிடிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற கேள்விகள்—பதில்கள் அச்சடித்து நடவடிக்கைக் குறிப்பில் சேர்க்கப்படும்.

## கிழக்குக் கடற்கரைச் சாலையில் பால வேலைகள்

*வினா எண் 373—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலையில் மேலும் எத்தனை பாலங்கள் கட்டும் உத்தேசம் உள்ளது ?

(ஆ) தற்போதுவேலை நடந்துகொண்டிருப்பவை எத்தனை?

(இ) எத்தனைப் பாலங்கள் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டு பரிசீலனையில் உள்ளது?

---

வினா எண் 373, 374, 392–399 ஆகியவை பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப் பெற்றுள்ளன.

1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) சென்னையிலிருந்து-கன்னியாகுமரி வரை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில், தற்போது மேலும் பாலங்கள் கட்டும் உத்தேசம் இல்லை.

(ஆ) தற்போது நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் மாநிலத் தொடர்பு மற்றும் பொருளாதார முதன்மைப் பணித் திட்டத்தின்கீழ் 6 பால வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(இ) மேற்கூறிய 6 பாலங்கள் தவிர கிழக்குக் கடற்கரைச் சாலையில் தற்போது எந்த பால வேலைகளும் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டு பரிசிலனையில் இல்லை.

வடக்குத் தாமரைக்குளத்தின் அருகே உள்ள பாலம்

*வினா எண். 374 — திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி தொகுதியில் வடக்குத் தாமரைக்குளத்தின் மேற்காக வடக்குத் தெற்காக ஓடுகின்ற பழைய ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம் சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

சடையனேரி கால்வாய்.

*வினா எண். 392— திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், சடையனேரி கால்வாயில் ஸ்ரீவைகுண்டம் அணையில் மறுகால் தண்ணீர் சென்றால்தான் தண்ணீர் விடப்படும் என்ற ஒப்பந்தத்தை மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது அந்த முறை மாற்றியமைக்கப் படும்?